2010 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும் மக்கள் இதயங்களைவிட்டு மறையாத புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மகாகவி பாரதி பிறந்த எட்டையபுரத்திலே கூட்டுறவு நூற்பாலை அமைத்துக் கொடுத்தார். அந்த நூற்பாலைதான் தமிழகத்திலே இன்றும் இலாபத்தோடு வெற்றிகரமாக இயங்கும் ஒரே கூட்டுறவு நூற்பாலையாகும். அதேபோல், பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகம் வாழும் விளாத்திகுளம் பகுதியிலே ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைத்து, அங்குள்ள இளைஞர்களுக்கும், இளம்பெண்களுக்கும் வேலை கொடுத்தால், வேலைக்காக அண்டை மாநிலங்களுக்கும், அண்டை மாவட்டங்களுக்கும் செல்கின்ற நிலை குறையும். ஆகையால், கண்டிப்பாக அங்கே ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்க மீண்டும் தங்கள்மூலம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்திலும், விருதுநகர் மாவட்டத்திலும் நிறைய தனியார் நூற்பாலைகள் இருக்கின்றன. அரசாங்கம் புதிதாக நூற்பாலை துவங்க வேண்டிய அவசியம் வருகிற நேரத்தில், அதற்கு வேண்டிய முன்னுரிமை அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. சையது கௌஸ் பாஷா, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

127—

கம்பிவட ஊர்தி

***31527—திரு. சை. சையது கௌஸ் பாஷா:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, திருப்பரங்குன்றம் மலை மீதுள்ள காசி விஸ்வநாதர் கோயிலுக்குக் கம்பிவட ஊர்தி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்:

திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான, மலைமீது அமைந்துள்ள அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயிலுக்குக் கம்பிவட ஊர்தி அமைக்கத் தற்போது எந்தவித உத்தேசமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. சையது கௌஸ் பாஷா, அவையில் இல்லை.

வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

128—

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

***29424—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பூரில் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம் துவக்க அவசியம் தற்போது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY SECRETARIAT வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS